

வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கடலூர் மாவட்டம், குமாராட்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செட்டிக்கட்டளை பகுதியில் நியாய விலைக்கடையை நேற்று (28.12.2024) திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி, ஆதித்யா, செந்தில்குமார், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைசெல்வன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் இரா.சரண்யா, சிதம்பரம் சார் ஆட்சியர் ரஷ்மி ராணி உட்பட பலர் உள்ளனர்.

### பேராசிரியரின் உதவியோடு

# அண்ணா பல்கலைக்கழக மாணவியின் புகார்!

## உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் விளக்க அறிக்கை!



சென்னை, டிச. 29-

அண்ணா பல்கலைக்கழக மாணவியின் புகார் பெறப்பட்டது குறித்து உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் விளக்கமளித்தார்.

இது குறித்து அமைச்சர் கோவி. செழியன் விளக்க அறிக்கை வருமாறு:

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த குற்றம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவி காவல்துறை அவசர உதவி எண் 100 க்கு நேரடியாக தொடர்பு கொண்டு புகார் அளித்தார்.

அதன் அடிப்படையில் விசாரணை நடத்த வந்த காவல்துறையினரிடம் அண்ணா பல்கலைக்கழகத்தின் POSH - Prevention of Sexual Harrasment Committee) உள் விசாரணை குழுவினைச் சேர்ந்த ஒரு பேராசிரியரின் உதவியோடு பாதிக்கப்பட்ட பெண் நடந்த விவரங்களை சொல்லி புகார் அளித்திருந்தார்.

காவல்துறையினர் பல்கலைக்கழகத்திற்கு வந்து விசாரணை செய்யும் போதுதான் இந்த சம்பவம் தொடர்பாக POSH குழுவில் இருந்த மற்றவர்களுக்கு இந்த பிரச்சனை தெரியவந்துள்ளது. அதை வைத்துதான் POSH குழு நேரடியாக புகார் அளிக்கவில்லை என தெரிவித்திருந்தேன். அது தவறான பொருள்படும்படி அமைந்துவிட்டது.

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம், கூட்டாம்புளியில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான "அன்பு உள்ளங்கள்" இல்லத்தை திறந்து வைத்து, அதனைத் தொடர்ந்து நடைபெற்ற விழாவில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி சிறப்புரையாற்றினார். உடன். சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளருமான பெ. கீதா ஜீவன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் கழக நிர்வாகிகள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

### கேரள மாநிலம் வைக்கம் நகரில் இருந்து

# சென்னை, வேளாங்கண்ணிக்கு பேருந்துகள் - அமைச்சர் சிவசங்கர் தொடங்கி வைக்கிறார்!

## மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் அறிக்கை



திருவனந்தபுரம், டிச. 29-

கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டத்தில் வைக்கம் நகரில் தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகம் புதுப்பொலிவுடன் அண்மையில் தமிழக முதல்வர் தலைவர் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் திறப்பு விழா நடைபெற்றது அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள தமிழக முதல்வர் அவர்கள் வைக்கம் சென்றபோது கோட்டயம் பாராளுமன்ற உறுப்பினர் அளித்த கோரிக்கையை ஏற்று வைக்கம் நகரில் இருந்து சென்னை மற்றும் வேளாங்கண்ணி ஆகிய இரண்டு இடங்களுக்கும் பேருந்துகள் இபக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்களுக்கு உத்தரவு பிறப்பித்தார் அதனை உடனடியாக பரிசீலனை செய்து வைக்கம் முதல் சென்னை மற்றும் வைக்கம் முதல் வேளாங்கண்ணி ஆகிய இரண்டு இடங்களுக்கும் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுத்து வருகிற ஜனவரி முதல் தேதி முதல் தொடங்கி வைக்கப்பட இருக்கிறது.

இந்த நிகழ்ச்சி வைக்கம் நகரில் 1.1.2025 புதன்கிழமை மாலை 5மணியளவில் கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தலைமையில் நடைபெறுகிறது. தமிழக அரசின் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் கேரள மாநில திமுக இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ் மாநில திமுக இளைஞர் அணி துணை அமைப்பாளர் விபின் முருகேசன், ஹரிகுமார் மற்றும் தென்காசி தெற்கு மாவட்ட கழக முன்னாள் செயலாளர் சிவ.பத்மநாபன், சிற்றார் ரவிச்சந்திரன், துரை பேச்சிமுத்து மாவட்ட கழக செயலாளர்கள் ரெஜிராஜ், போபன். கே.பேபி, அனீஷ், ஜாபர், சஜயன், ரெஜீஸ், நெவின், பிரின்ஸி அன்னா, இலியாஸ், மன்னன், அஜ்மல் பாபு அன்வர் அப்துல்லா, அபுபக்கர், மஜுூத், சரீஃப், மாத்யூ ஜான், ரபீக், ஜனார்த்தனன் மற்றும் அனைத்து முன்னணி நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ளனர் இந்த நிகழ்ச்சியில் கேரள மாநிலம் முழுவதும் உள்ள கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்திடுமாறு கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### சென்னை – பரங்கிமலை ரயில் நிலையத்தில்

# கல்லூரி மாணவியை ரயில் முன் தள்ளி கொலை செய்த வழக்கு!

## கழக அரசு விரைந்து வழக்கை நடத்தி தீர்ப்பு பெற்றது!

சென்னை, டிச.29-

பரங்கிமலையில் ரயில் முன் கல்லூரி மாணவியை தள்ளி கொலை செய்த வழக்கில் கைதான இளைஞர் சதீஷ் குற்றவாளி என மகளிர் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தண்டனை விவரம் வரும் 30ம் தேதி அறிவிக்கப்பட உள்ளது.

சென்னையை அடுத்த ஆலந்தூர் காவலர் குடியிருப்பைச் சேர்ந்தவர் மாணிக்கம். சொந்தமாக கார் வைத்து வாடகைக்கு ஓட்டி வந்தார். இவரது மனைவி ராமலட்சுமி, ஆதம்பாக்கம் காவல் நிலை யத்தில் ஏட்டாகப் பணி யாற்றினார். இத்தம்பதியின் மூத்த மகள் சத்யா(20), தியாகராய நகரில் உள்ள தனியார் கல்லூரியில் பிசிஏ 3ம் ஆண்டு படித்து வந்தார். இவர், அதே பகுதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற உதவி ஆய்வாளர் தயாளனின் மகன் சதீஷ் (31) என்பவரைக் காதலித்து வந்தார்.

இந்நிலையில், பெற்றோர் கண்டித்ததால் சத்யா, திடீரென்று காதலை கை விட்டார். இதனால் ஆத்திரமடைந்த சதீஷ், கடந்த 2022ம் ஆண்டு அக்.13ம் தேதி கல்லூரி செல்வதற்காக பரங்கிமலை ரயில் நிலை யத்தில் காத்திருந்த சத்யாவை, அந்த வழியாக வந்த ரயில் முன்பு தள்ளி படுகொலை செய்தார்.

இதுதொடர்பாக சி.பி.சி.ஐ.டி. போலீஸார் விசாரணை நடத்தி சதீஷை கைது செய்து, அவர் மீது நீதி மன்றத்தில் குற்றப்பத்தி ரிக்கை தாக்கல் செய்தனர். இந்த வழக்கு விசாரணை சென்னை அல்லிகுளத்தில் உள்ள மகளிர் சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி ஸ்ரீதேவி முன்னிலையில் நடந்தது.

70 பேரிடம் விசாரணை: போலீஸார் தரப்பில் சிறப்பு அரசு வழக்கறிஞர் ரவீந்திரநாத் ஜெயபால் ஆஜராகி, 'சதீஷ் மீதான குற்றச்சாட்டு கடுமையானது. அவருக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என வாதாடினார். அரசு தரப்பு சாட்சிகள் 70 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

அனைத்துத் தரப்பு விசாரணையும் முடி வடைந்த நிலையில், நீதிமன்றத்தில் சதீஷ் நேற்று ஆஜர்படுத்தப் பட்டார். இதையடுத்து நீதிபதி பிறப்பித்த உத்தர வில், "தமிழ்நாடு பெண் வன்கொடுமை தடுப்புச் சட்டம் மற்றும் இந்திய தண்டனை சட்டப்பிரிவு 302 (கொலை) ஆகியவற்றின் கீழ் சதீஷ் மீதான குற்றச்சாட்டு நிரூபணமாகி உள்ளது. எனவே, அவரை குற்றவாளி என அறிவிக்கிறேன். தண்டனை விவரம் 30ம் தேதி தெரிவிக்கப்படும். அன்றைய தினம் சதீஷை மீண்டும் நீதிமன்றத்தில் போலீஸார் ஆஜர்படுத்த வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.

**கழக அரசு விரைந்து நடவடிக்கை!**

இவ்வழக்கில் விரைந்து தீர்ப்பினைப் பெற்றிட, கழக அரசு முனைப்பான சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டது என்பதும் - அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன்முகம்மது ஜின்னாவின் வழிகாட்டுதலில், சென்னை மாவட்ட அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் ஜி.தேவராஜன் மேற்பார்வையில், அரசு சிறப்பு வழக்கறிஞராக ரவீந்திரன் ஜெயபால், இவ்வழக்கில் ஆஜராகி வாதாடினார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா வ. துரை

### டிசம்பர் 29 (1994)



தனது இளமைக் காலம் முதலே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

முப்பது ஆண்டுகள் தொடர்ந்து திண்டிவனம் நகரக் கழகச் செயலாளராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளரப் பாடுபட்டவர்.

கழகத்திற்குச் சோதனை வந்தபோது உறுதி குலையாமல் கழகப் பணியாற்றியவர்.

நெருக்கடி காலத்தில் 'மிசா' கைதியாக ஓராண்டு சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த சட்ட நகல் எரிப்புப் போராட்டம், இலங்கைத் தமிழர் ஆதரவு என அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. தலைமை!

# தாழையூத்தில் ரூ.2.8 கோடியில் வளர்ச்சித் திட்டப்பணிகள்! டி.பி.எம்.மைதீன்கான் துவக்கி வைத்தார்!

நெல்லை.டிச.29-

நெல்லை மாவட்டம் மானூர் ஊராட்சி ஒன்றியம் தாழையூத்து ஊராட்சியில் முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் 2024-2025 ஆம் ஆண்டிற் கான ரூபாய் 2.8 கோடி மதிப்பில் வளர்ச்சி திட்டப் பணிகள் துவக்க விழா நிகழ்வு பாளை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல்வகாப் தலைமையில் தாழையூத்து ஊராட்சி மன்றத் தலைவர் எஸ்.வி.எஸ். பீர்மைதீன், மானூர் ஒன்றியக் குழு தலைவர் செல்வி ஸ்ரீலேகா அன்பழகன் ஆகியோர் முன்னிலை யில் நடைபெற்றது,

சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் குறிச்சிகுளம் நிஜாம் வரவேற்புரையாற்றினார்.

மானூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் அன்பழகன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் மத்திய மாவட்டம் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் பங்கேற்று ரூபாய் 2.8 கோடி செலவில் பல்வேறு திட்ட பணிகளை துவக்கி வைத்தார்.

நிகழ்வில் மாநகராட்சி துணை மேயர் ராஜு, மாவட்ட ஆதி திராவிட நல குழு அமைப்பாளர் நவநீதன், மாவட்ட இளை ஞரணி அமைப்பாளர் சபி முகமது, தாழையூத்து ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் பேச்சியம்மாள், சரஸ்வதி, சீதா லட்சுமி, இசக்கிராணி, சாரதா, முத்துக்குமார், மாரீஸ்வரி, வள்ளி, அப்துல் தானிஷ், சித்தி பாத்திமா, நாகராஜன், கிளை கழக செயலாளர்கள் முஜ்பூர் ரகுமான்,தாழை ஜமால், நிஜாம், பெருமாள், அமல்ராஜ், சந்துரு, பண்டாரம், சுப்புலட்சுமி.கிளை கழக நிர்வாகிகள் சேக் முகைதீன், இக்பால், இஸ்மாயில், ஜோசப் ராஜ், ரியாஸ், சரவணன், ராமச்சந்திரன், ரவி மற்றும் முகைதீன் ஆண்டவர் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் முகம்மது கனி, பொருளாளர் அயூப் கான், அபுபக்கர் சித்திக் ஜும்மா பள்ளி வாசல் தலைவர் முகம்மது அனீபா, செயலாளர் முகமது அலி, பிலால் ஜும்மா பள்ளிவாசல் செயலாளர் முகைதீன் அப்துல் காதர் உட்பட பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் தாழையூத்து ஊராட்சி மன்ற துணை தலைவர் காஜா மைதீன் நன்றியுரையாற்றினார்.

### தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க

# மாநில செய்தித் தொடர்பாளராக அ.ரகமத்துல்லா நியமனம்!

## மாநில தலைவர் கு.தியாகராஜன் அறிவிப்பு!

புதுக்கோட்டை, டிச. 29-

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநிலத் தலைவர் கு .தியாகராஜன் புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அக்கச்சிப்பட்டியில் பணிபுரிந்து வரும் பட்டதாரி அறிவியல் ஆசிரியர் அ.ரகமதுல்லாவை தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில செய்தி தொடர்பாளராக நியமித்து அறிவிப்பை வெளியிட்டார்.

மதுரை காமராஜர் பல்கலைக் கழக தொல்காப்பியர் அரங்கில் கடந்த ஞாயிறு அன்று தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மதுரை மாவட்ட பொதுக்குழுக் கூட்டம் மாநில அமைப்பு செயலாளர் செ.ரமேஷ் தலைமையில் நடைபெற்றது.

இதில் மாநில பொறுப்பாளர்கள் மற்றும் அருகாமை மாவட்டமான புதுக்கோட்டை, திருச்சி, சிவகங்கை, ராமநாதபுரம், தேனி மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர். இதில் சங்க பணிகளில் சிறப்பாக செயலாற்றி வரும் புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியம், அக்கச்சிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பட்டதாரி அறிவியல் ஆசிரியரும், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் புதுக்கோட்டை மாவட்ட செய்தித் தொடர்பாளராகவும் அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றி வரும் ரகமதுல்லா வை அவரின் பணிகளை பாராட்டி அங்கீகரிக்கும் விதமாக தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில செய்தி தொடர்பாளராக பணியாற்றுவார் என்று அறிவித்தார்.



கழக தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைகிணங்கவும், கழக இளைஞர்அணி செயலாளர் துணைமுதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படியும், கழக சட்டத்துறை செயலாளர் என். ஆர். இளங்கோ அறிவிப்பின் படி தி.மு.க. சட்டத்துறை மத்திய மண்டலம் 2 உள்ளடக்கிய புதுக்கோட்டை மாவட்டத்தில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட அமைப்பாளர்கள், என். வீரையா, வளர்மதி ஆகியோர் வரவேற்றனர், சட்டம் மற்றும் சிறைத்துறை அமைச்சர் ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யாநாதன் மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே. செல்லபாண்டி ஆகியோர் தலைமையிலும், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். முத்துராஜ் முன்னிலையில், கழக சட்டத்துறை இணை செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான், தலைமைக் கழக வழக்கறிஞர் நாகை மூ. தினேஷ்குமார் சிறப்புரையாற்ற, வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.